# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பதிவு அஞ்சல் மூலம்

## நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்

திருமதி.K. உமாராணி, B.E.,
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
விழுப்புரம் மாவட்டம்,
எண்.56/ஏ, தாட்கோ வளாகம்,
அரசு மருத்துவமனை சாலை,
விழுப்புரம்–605 602.

பெறுநர்

ஊராட்சி மன்றத் தலைவர்,
கஞ்சனூர் ஊராட்சி,
விக்கிரவாண்டி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

ந.க.எண்.2146/2021/விமா2/

நாள்:29.03.2022

ஐய்யா/அம்மையீர்,

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் – விழுப்புரம் மாவட்டம் – விக்கிரவாண்டி வட்டம் – காணை ஊராட்சி ஒன்றியம் – கஞ்சனூர் ஊராட்சி மற்றும் கிராமம் – சர்வே எண்கள்– 270A/2B ஆகியவற்றில் – 1.00 ஏக்கர் (அ) 4050.00 ச.மீ – பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான ஒப்புதல் – வழங்குதல் குறித்து

பார்வை:

1) மனுதாரர் திரு.A. சேட்டு, விழுப்புரம் அவர்களின் விண்ணப்ப நாள் :13.12.2021 (Online Application No.202105301016510/ dt..28.10.2021.
2) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விமா அவர்களின் கடிதம் ந.க.எண்.2146/2021/நாள். 13.01.2022.
3) அரசாணை எண்.18,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
4) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ, நாள். 24.12.2020.
5) மனுதாரர் திரு.A. சேட்டு, விழுப்புரம் அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.01.03.2022,
6) அரசாணை எண்.138,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.06.2004.
7) அரசாணை எண்.79,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.05.2017.
8) அரசாணை எண்.141,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைUD4(3), நாள்.23.09.2020.
9) அரசாணை எண்.181,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைUD4(1), நாள்.09.12.2020
10) அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017–1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள். 30.08.2017.

11) நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள். 08.09.2017.

12) இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்:22.03.2022 (நன்னிலை வரி கட்டணம், மற்றும் கொடிநாள் நிதி வங்கி வரவோலை, அஞ்சலக தேசிய சிறுசேமிப்பு பத்திரம் செலுத்தக் கோரியது)

13) மனுதாரர் நன்னிலை வரி கட்டணம், மற்றும் கொடிநாள் நிதி வங்கி வரவோலை, அஞ்சலக தேசிய சிறுசேமிப்பு பத்திரம் செலுத்தி விபரம் பெறப்பட்ட நாள்:25.03.2022

14) நகர் ஊரமைப்பு இயக்குநர், அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ, நாள். 08.02.2021.

15) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/TCP2, நாள். 14.08.2021.

-----

1) பார்வை 1 –ல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை (2)–ல் கட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்:19.01.2022-ன் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை (5)–ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு தானமாக தானபத்திர எண்.338/2022/ நாள்.28.02.2022–ல் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உத்தேச மனைபிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ.(வி.மா)எண்.07/2022 என எண்ணிடப்பட்டு நான்கு அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3) மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட பத்திரபதிவு அலுவலகத்திற்கும் நில அளவை துறைக்கும், தகவலுக்கும், உரிய நடவடிக்கைக்கும், அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயல் ஆணை கடிதம் மனை பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## சிறப்பு நிபந்தனைகள்:

6) (a)பார்வை (9)–ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை (7)–ல் கண்ட TNCDBR-2019விதி எண்.47(11) ன் படியும் மாநகராட்சி /நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads storm water drains and street lights from the applicants". After Collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

7) (b) மாநகராட்சி /நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenitites like storm water drains, water supply facilities by constructing required OHT provide necessary street lights etc., as per the standards specified by the Local Body."

8) (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது, ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் கடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020–ன்படி EWS மனைகள் ஒலுங்கிணைப்பு சேய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

9) பார்வை (10) மற்றும் (11)–ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண்.உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

10 'The Tamil Nadu Government in G.O.Ms.No.112. Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன் படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

11 பார்வை (7)–ல் கண்டுள்ள அரசாணையின் படி திட்டமில்லா பகுதி / திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3ன் படிகூராய்வு கட்டணமாக ரூ,1000 ஐயும் மற்றும் விதி எண்9ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நில பயன் மாற்ற கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் கீழ்காணும் அரசு கணக்குத் தலைப்பின் கீழ் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**Head of Account: (Land use Conversion Charge)**

0217 Urban Development – 60
Other Urban Development Schemes 800
Other Receipts-AS Receipts Under
Land use conversion charges -27
Non Taxation fees – 09 collections.
**DPC: 0217-60-800-AS – 22709**

பார்வை (3)ல் காணும் அரசாணைளின்படியான தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகளின்படி, பொது ஒதுக்கீட்டிற்கான தொகையினை நில வழிகாட்டு மதிப்பீட்டின்படி 1 ச.மீ–க்கு ரூ.58.00/– வீதம் 150.00ச.மீ–க்கு தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) உரிய அரசு கணக்கில் மனுதாரரால் WWW.Karuvoolam.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை (6) -ல் காணும் அரசாணையின்படி இவ்வலுவலக கடிதம் மூலம் உத்தேச மனைப்பிரிவு ஒப்புதல் குறித்து அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம் செலுத்த கோரப்பட்டு பார்வை (13)ல் காணும் மனுதாரர் கடிதத்தில் நன்னிலை வரி கட்டணமாக ரூ.**7,800/-** (ரூபாய் ஏழாயிரத்து எண்ணூறு மட்டும்) SBI. விழுப்புரம் கிளையில், WWW.Karuvoolam.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக நாள். 25.03.2022-ல் செலுத்தப்பட்டுள்ளது.

மனுதாரர் கொடி நாள் நிதிக்காக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) In favour of Armed Force Flag day fund, Payable at Villupuram என்ற பெயரில் பெறப்பட்ட வங்கி வரை வோலையின் (Demand Draft No.504829) அசல் நாள்: 25.03.2022 மற்றும் மனுதாரர் பெயரில் ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)-க்கு சிறுசேமிப்பு பத்திரம் நாள்:25.03.2022-ன் நகல் பெறப்பட்டுள்ளது.

மனுதாரர், இறுதி ஒப்புதலுக்கு, ஊராட்சி மன்றத் தலைவர், கஞ்சனூர் ஊராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஊராட்சி மன்றத் தலைவர், கஞ்சனூர் ஊராட்சி அவர்கள் மனுதாரருக்கு உத்தரவு வழங்குமாறும் அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**இணைப்பு**

வரைபடம் மற்றும் மனைபிரிவு நிபந்தனைகள்
(3 தொகுப்பு மற்றும் அசல் தானபத்திரம்
தானபத்திர எண்.338/28
நாள்.28.02.2022, 14 தாள்கள்)

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மாவட்டம்.
விழுப்புரம்.

29/03/22

29/03/22

29.3.2022

நகல்:

1) திரு.A.சேட்டு,
எண்.324,
சாலமேடு கிராமம்,
விழுப்புரம்.

2) வட்டாட்சியர்,
விக்கிரவாண்டி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

3) உதவி இயக்குநர் (நில அளவை)
மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம்,
விழுப்புரம் மாவட்டம்.

4) **Tamil Nadu Real Estate Regulatory Authority,**
**No.1A. 1st Street, Gandhi Irwin Bridge Road,**
**Egmore, Chennai-600 008.**

5) இருப்பு கோப்பு (வரைபடம் -1 (ம) நிபந்தனைகள் படிவம் -1)

6) கோப்பு ( வரைபடம் -1 (ம) நிபந்தனைகள் படிவம் -1)

45

தமிழ்நாடு அரசு

நகர் ஊரமைப்புத் துறை, விழுப்புரம்

கோப்பு எண்.2146/2021/விமா2, நாள்:29.03.2022

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், காணை ஊராட்சி ஒன்றியம், கஞ்சனூர் ஊராட்சி மற்றும் கிராமம்

**மனைப்பரிவு ம.வ./ந.ஊ.உ.இ.(வி.மா)எண்.07/2022**

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

1) நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள் பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்படவேண்டும்.
3) மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்க முன்பு எந்தவொரு மனையையும் விற்கவோ குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்தமனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
4) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மணைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த பட வேண்டும், மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR 2019 குறிப்பிட்டுள்ள Residential use -ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5) மனையின் ஊடே குறைந்த அழுத்த /உயர் அழுத்த மின் கம்பி பாதை / தந்தி கம்பி பாதை அமைந்தால் கம்பி பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்கவேண்டும்.
6) மனைபிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7) 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற் போல் அடுத்தடுத்து 9 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.
8) மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய இறுதி ஒப்புதலினை ஊராட்சி மன்றத் தலைவர், கஞ்சனூர் ஊராட்சி அவர்களிடம் ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கு நகர் ஊரமைப்பு துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.
9) அ) மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி / இசைவு (PlanningPermission/Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ)மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10) மனுதாரர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறை விழுப்புரம் அவர்களிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ.(வி.மா)எண்.07/2022 என எண்ணிட்டு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம்/ விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில்6'x4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11) மனுதாரர் சமர்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின் படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது, எனவே உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனை பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனை பிரிவிற்கு Planing permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனை பிரிவிற்கு வழங்கப்பட்ட Planing permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| விபரம் | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| 1) மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | – | 1.00 ஏக்கர் (அ)<br>4050.00 ச.மீ | |
| 2) கோரிய மனைகள் | – | 24 | |
| 3) ஒதுக்கிய மனைகள் | – | 26 | |
| 4) விற்பனைக்குரியவை<br>i) EWS மனைகளின் எண்கள். பரப்பு | – | – | – |
| ii) மனை எண்கள் | – | 1 முதல் 26 வரை | |

<u>பொது ஒதுக்கீடு</u>

<u>உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டவை</u>

| | | | |
|---|---|---|---|
| 1) உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | – | 1308.90 ச.மீ | |
| 1) <u>பொது ஒதுக்கீடு</u> | – | பூங்கா ஒதுக்கீட்டிற்கான தொகை நில வழிகாட்டி மதிப்பின்படி மனுதாரரால் உரிய அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. | |
| 2) உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு | -- | A – **33.05** சமீ | 1.20 % |
| 3) தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது | – | B – **22.80** ச.மீ (TANGEDCO) உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | 0.83 % |

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மாவட்டம்,
விழுப்புரம்.

29/3/2022
29/03/22
24/03/22
29.3.2022

காணை ஊராட்சி ஊராட்சிமன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் 49

முன்னிலை திரு.G.ராமலிங்கம்

க.எண்.

நாள்: 16.06.2022.

பொருள் மனைப்பிரிவு விக்கிரவாண்டி ஒன்றியம் கஞ்சனூர் ஊராட்சி கஞ்சனூர் கிராமம் சர்வே எண்.270A/2B பரப்பளவு கொண்ட அபிராமி அவென்யூ மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் - சார்பு

படிக்க

1) அரசாணை எண்.19, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் [UD(3)]துறை நாள்:23.09.2020
2) நகர் ஊரமைப்பு இயக்குநர் விழுப்புரம் மாவட்டம் அவர்களின் ந.க.எண்.2146/2021/விமா2
3) காணை ஊராட்சி தீர்மானம் எண்.21 நாள்:16.06.2022
4) தானப்பத்திரம் எண்.338/2022
5) ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா விழுப்புரம் வங்கி கருவூல செலுத்துச்சீட்டு நாள்:25.03.2022

உத்தரவு

காணை ஊராட்சி ஒன்றியம் கஞ்சனூர் ஊராட்சி கஞ்சனூர் கிராமம் சர்வே எண்.270A/2B.- ஆகியவற்றில் 1.00 ஏக்கர் (அ) 4050.00 ச.மீட்டர் வரன் முறைப்படுத்திட பார்வை (1)-ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (2) ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் மாவட்டம் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை(1) ல் (ம) (4) ல் காணும் ஊராட்சியின் தீர்மான மற்றும் தான பத்திரம் அமைந்துள்ள இடத்தினை ஸ்தல ஆய்வு செய்து மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்த அனுமதி வழங்குமாறு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்,

பார்வை (5)ல் காணும் விவரப்படி புன்செய் வகைப்பாட்டில் இருந்த மனையாக மாற்ற அனுமதி கோரும் இடத்தில குடிநீர் பராமரிப்பிற்காக ரூ.9000 விழுப்புரம் கிளை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் கஞ்சனூர் ஊராட்சி பொதுநிதி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன்மாற்ற கட்டணமாக உரிய அரசு தலைப்பில் செலுத்தி அதற்குண்டான கட்டணமாக ரூ.7800/- ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் செலுததி அதற்குண்டான ஆவணங்கள் பின்வரும் விவரப்படி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசுத்தலைப்பு-

| வ.எண். | விஸ்தீரணம் | சார்பதிவாளர் சந்தைமொத்த (ஏக்கரில்) | 3%நில மாற்று கட்டணம் |
|---|---|---|---|
| 1 | | | |
| | ஏக்கர் 1.00<br>4050 ச.மீ | . | ரூ.16,800/- |

நிபந்தனைகள் :

1). நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசிலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல எனஅறியப்பட்டால் (அ) மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏறபடக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

2). மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அனுமதி பெறவேண்டும். மேலும் நீர்நிலைகள் மற்றும் அரசுக்கு சொந்தமான இடங்கள் என தெரியவந்தால் எவ்வித முன்றிவிப்புமின்றி அனுதி ரத்து செய்யப்படும்.

3). மேற்படி மனைப்பிரிவிற்கு ஊரக வளர்ச்சித்துறையால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உரிய துறையினால் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும்.

4). மேற்படி **அபிராமி அவன்யூ** என்ற மனைப்பிரிவில் தார் சாலை தெருக்களின் பெயர் பலகைகள் ஆகியன அமைக்கப்பட்டு தானமாக அனந்தபுரம் சார்பதிசாளர் **ஆவண எண்.338/2022 / நாள்.28.2.2022** ன்படி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மனையின் உயர்மின்னழுத்த கம்பிகள் செல்லுமாயின் அதனை மேற்படி மனை உரிமையாளர் தனது சொந்த செலவில் சரிசெய்து தரவேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளக்குட்பட்டு காணை ஊராட்சி ஒன்றியம், கஞ்சனூர் ஊராட்சி, **கஞ்சனூர் கிராமம் சர்வே எண்.270A/2B** ஆகியவற்றில் **1.00 ஏக்கர் (அ) 4050 சதுர மீட்டர்** பரப்பளவில் அமைந்துள்ள 26 மனைகளுக்கு மட்டும் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

**தலைவர்**
**ஊராட்சி மன்றம்**
**கஞ்சனூர் ஊராட்சி-605 203,**
**காணை ஒன்றியம்.**

பெறுநர்
திரு.A.சேட்டு
எண்.3 2 4
சாலமேடு கிராமம்,
விழுப்புரம்

நகல் : உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) விழுப்புரம் அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : உதவி இயக்குநர் (நகர் ஊரமைப்பு) விழுப்புரம் அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : சார்பதிவாளர் அனந்தபுரம்

நகல் : வட்டாட்சியர் விக்கிரவாண்டி



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate